04.03.2026 OS.No. 63/2013

சாட்சி : D.W 3 நித்யா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**:

1. 2ம் பிரதிவாதியாகிய எனது தகப்பனார் பொசலான் கூடப்பிறந்தவர்கள் வாதி மற்றும் 3 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் ஆவார்கள் என்றால் சரிதான். 3 முதல் 8 வரை உள்ள பிரதிவாதிகளுடன் சுமூகமான உறவு முறை இருந்ததா என்றால் மெய்யப்பன் என்வருடன் எப்போதும் இருந்தது இல்லை, பிற பிரதிவாதிகளுடன் வழக்கு தாக்கல் செய்யும் முன்புவரை சுமூகமான உறவு முறை இருந்தது. 3 முதல் 8 வரையயிலான பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன எதிர் கட்சி செய்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். 3 முதல் 8 வரையயிலான பிரதிவாதிகள் எனது எதிர்வழக்குரைக்கு எதிராக எதாவது சொல்லியிருந்தால் நான் அதை மறுத்து சொல்வேனா என்றால் தவறாக இருந்தால் மறுத்து சொல்வேன். அவ்வாறு என்னால் மறுத்துரைக்காத அனைத்து விவரங்களும் என்னால் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்று சொன்னால் சரிதான். எனது வாக்குமூலத்தில் எனது தகப்பனார் பொசலான் 32 பிரதிவாதியாக இருந்து வழக்கு நடத்தி பிரிவினை செய்து தனக்கு கிடைத்தாக சொன்னதன் அடிப்படையில் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அது சம்மந்தமாக ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை கிராமத்தில் பேசுவதை வைத்து எனக்கு தெரியும்.

2. எனது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் 08.09.2011 தேதியிட்ட தான செட்டில் மெண்ட் பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை, அது எனது சிறிய தகப்பனரான 4 வது பிரதிவாதியிடம் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் தான செட்டில் மெண்ட் ஆவணமான வா.சா.ஆ.8 ஆவணத்தில் எந்த இடத்திலாவது தான செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்த ராக்கப்பன் அம்பலம் சொத்து எவ்வகையில் கிடைக்கப்பெற்றது என குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை, சாட்சி மீண்டும் அந்த வழக்கானது தற்போது நடைபெற்று வருகிறது அதற்கான ஆவணங்கள் தன் வசம் இல்லை என்று கூறினார். தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 2 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளுக்கு

பொதுக்குடும்ப சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1வது இலக்கச் சொத்தை விற்பனை செய்து அதன் அடிப்படையில் இதர வழக்கு சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வாதிக்கும் வழக்கு சொத்தில் பங்கு பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

3. வழக்கிற்க்காக நான் தாவா சொத்து எனது தகப்பனார் தனிப்பட்ட சொத்து என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில் மெண்ட் பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி 3, 4, 5 முதல் 8 மற்றும் 11 தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை தரப்பினர்களும் ஆஜர் இல்லை, எனவே குறுக்கு விசாரணை இல்லை முடிக்கப்பட்டுவிட்டது.)

**மறுவிசாரணை:** இல்லை.

| |
|---|
| சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,<br>சார்பு நீதிபதி,<br>தேவகோட்டை. |